**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 413 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 4** |
| **Name** | : | திருமதி. உமாராணி |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **04.12.2023**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்தஊர், மதுரை உசிலம்பட்டி ஐயம்பட்டியாகும். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் எனது மச்சான் மகன் ஆவார். என் பெயரில் குன்னத்துப்பட்டியில் தோட்டம் உள்ளது. அந்த தோட்டத்தில் நாங்கள் விவசாயம் செய்து வருகிறோம். என் கணவர் கடந்த 2010 ம் ஆண்டு டிசம்பர் மாதம் இறந்த பிறகு, ஆஜர் எதிரியின் குடும்பத்தினார் என் தோட்டத்திற்கு வந்து வந்து செல்வார்கள். என் அம்மா என் தோட்டத்தில் விவசாயம் பார்த்துக் கொண்டிருந்தார். எதிரியின் குடும்பத்தார் வழக்கம்போல் வந்து வந்து போய்க்கொண்டிருந்தார்கள். என் கணவர் இறந்தவுடன், எங்கள் தோட்டதை எதிரியின் குடும்பத்தார் வைத்துக்கொள்ள வேண்டும் என்று என்னுடன் பிரச்சனை செய்தார்கள். அதற்கு நான் வழக்கு பதிவு செய்தேன். தேதி, மாதம் ஞாபகம்இல்லை. கடந்த 2012 ம் வருடம் முதல் எதிரியின் வீட்டினர் என்னுடன் பிரச்சனை செய்து வந்தார்கள். 2018 ம் வருடம்

உசிலம்பட்டிக்கு வந்து சண்டை போட்டார்கள். என் அம்மா, அக்கா எங்கள் தோட்டத்தில் இருக்கும் போது எதிரியும் அவரது குடும்பத்தார் வந்து சண்டை போட்டார்கள். மோட்டாரை உடைத்து விட்டார்கள். வருடம் முழுக்க சண்டை போட்டுக்கொண்டே தான் இருந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :</u>

2012ம் வருடத்திலிருந்து தான் எதிரி மற்றும் அவரது குடும்பத்தார் என்னுடன் சண்டை போட்டார்கள். 2012ல் தான் வழக்கு தொடர்ந்தேன். 2012ம் வருடத்திற்குப் பிறகு எதிரி மீது வேறு எந்த வழக்கும் எதிரி மீது போடவில்லை என்றால் சரிதான். 2014ம் வருடம் ஆனால் போர் உடைத்ததால் புகார் கொடுத்தோம். அந்த புகாரினை எனது சித்தப்பா கொடுத்தார். அப்போது நான் திருப்பூரில் இருந்தேன். சாட்சி தற்போது 2016ம் வருடம் புகார் கொடுத்ததாக சொல்கிறார். இந்த விபரங்களை நான் போலிசார் விசாரணையின் போது சொன்னேன். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். போர் உடைத்ததற்கு எனது சித்தப்பா தான் புகார் கொடுத்தார். எனது அப்பா, அம்மா எல்லாரும் அங்கு இருந்தார்கள் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் என் அப்பா இல்லை. என் அம்மா, சித்தப்பா பெரியம்மா மகள் ஆகியோர் அங்கு இருந்தார்கள். எதிரி என் மீது சிவில் வழக்கு போட்டிருந்தார் என்றால் சரிதான். எனது கணவர் சந்தானம் ஆஜர் எதிரிக்கு சித்தப்பா என்றால் சரிதான். அந்த வழக்கில் அத்துமீறி உள்ளே நுழையக்கூடாது என்று எதிரி உத்தரவு வாங்கியிருந்தார் என்றால் சரியல்ல. 2016ம் வருடம் டிசம்பர் மாதம் எதிரி என் மீது போட்ட சிவில் வழக்கு முடிவுற்றது என்றால் சரிதான். எனது கணவரும் எதிரியின் அப்பாவும் கூட்டுக்குடும்பமாக இருந்து, மேற்படி தாவா சொத்தை எனது பெயருக்கு கிரையம் வாங்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் சம்பாதித்து தான் இந்த சொத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். சிவில் வழக்கு சீக்கிரம் முடியாது என்ற காரணத்திற்காக 06.02.2012 அன்று எதிரியின் குடும்பத்தார் மீது புகார் அளித்துள்ளேன்

என்றால் சரிதான். அந்த புகாரில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்று அந்த புகாரினைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. திருப்பூருக்கும் செட்டியபட்டி அருகில் உள்ள குன்னத்துப்பட்டிக்கும் காரில் வந்தால் சுமார் 3.30 மணி நேரத்தில் வந்துவிடலாம். சம்பவத்தன்று நான் காரில் தான் வந்தேன் என்றால் சாட்சி எந்த தேதி என்று கேள்விகேட்கிறார். 2016ம் ஆண்டு போரை உடைத்த சம்பவம் நடந்த போது அன்று நான் இரவு 10.00 மணிக்கு காரில் தான் வந்தேன். மறுநாள் காலை 10.30 மணிக்கு போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி தான் தாவா தோட்டத்தை உழுதுகொண்டிருந்தார் என்றால் சரியல்ல. எதிரியைப் பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்தோடும் எதிரியைத் தோட்டத்தைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடும் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை